DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 12/2022

Prosecution PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பாக்கியராஜ் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 27.03.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

A1 produced. Accused A2,A3 present. A4,A5 absent, 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் நாகப்பட்டிணம் மாவட்டம் இளம்கடம்பனுார் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி செல்வமணி எனது கிராம உதவியாளராக இருந்தார். 1 வது எதிரியை பால்பாண்டியை நாகப்பட்டிணம் NIB CID அலுவலகத்தில் பார்த்தேன். 18.12.2019 ம் தேதி நாகூர் கிராம நிர்வாக அலுவராக பணியில் இருந்தபோது காலை 6.30 மணிக்கு நாகப்பட்டிணம் போதைபொருள் நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் எனக்கு போன் செய்து கஞ்சா வழக்கில் நீதிமன்றத்தில் சரண்டர் ஆன ஒரு நபர் ஒப்புதல்வாக்குமூலம் கொடுக்கிறார் அதற்கு நீங்கள் சாட்சியாக வருமாறு என்னையும் கிராம உதவியாளர் செல்வமணியும் அழைத்தார். நாங்கள் காலை 7.45-8.00 மணிக்கு நாகப்பட்டிணம் NIB CID அலுவலகம் சென்றோம். அங்கு எதிரிபால்பாண்டி கீழே உட்காந்திருந்தார். காவல் துணை கண்காணிப்பாளர் நாங்கள் சென்றதும் வழக்கு குறித்து சொல்லி எதிரி பால்பாண்டியை எங்கள் முன்னிலையில் விசாரித்தார்கள். எதிரி பால்பாண்டி, தாமாக முன் வந்து ஒப்புதல்வாக்குமூலம்கொடுததார். அதை என் முன்பாகவும் உதவியாளர் செல்வமணி முன்பாகவும பதிவு செய்தார்கள். அதில் நானும் செல்வமணியும் கையொப்பம் செய்தோம். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

நாகப்பட்டிணம் NIB CID அலுவலகம் நாகப்பட்டிணம் நகர எல்லைக்குள் வருகிறது. எதிரி பால்பாண்டியை எப்போது காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்று நேரடியாக தெரியாது. நான் செல்வதற்கு முன்பே எதிரி பால்பாண்டியும்போலிசாரும் என்ன பேசிகொண்டிருந்தார்கள் என்று தெரியாது. நாங்கள் சென்றதும் எதிரிபால்பாண்டி ஒப்புதல்வாக்குமூலம் தரபோகிறார் சாட்சியாக இருக்குமாறு கேட்டார்கள். நான் முதல்விசாரணையில்சொன்னவாறு எதிரி பால்பாண்டி எந்த

வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் போலிசார் தயாரித்து வைத்திருந்த ஆவணத்தில் கையெழுத்துபோட்டுவிட்டு உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/ஜி.சுந்தரராஜன்
அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்